# சங் திபெத்தியர்கள் (Tibetans, Gtsang)




**வசிப்பிடம்:** ஏறக்குறைய 7,00,00 திபெத்தியர்கள் சங் மொழிப் பிரிவைச் சேர்ந்தவர்களாவார்கள். இவர்கள் கிழக்கிலிருந்து மேற்குவரை ஏறக்குறைய திபெத்-நேபாள் எல்லை முழுவதும் பரந்த பகுதியில் வாழ்கின்றனர். சங் மொழி திபெத்தின் இரண்டாவது மற்றும் நான்காவது பெரிய நகரங்களான ஷிகாசே (Xigaze) மற்றும் கியன்செவில் (Gyantse) பேசப்படுகிறது. கியன்செவின் முக்கிய வசீகரம் ரப்தென் குன்சங் பாபாவால் (Rapten Kunsang Phapa) (1389-1442) கட்டப்பட்ட இங்குள்ள மிகப்பெரிய புத்தர் கோவில் (Pagoda) ஆகும். சுமார் 60,000 சங் திபெத்தியர்கள் காத்மண்டு மற்றும் நேபாளின் மேற்குப்பகுதியில் வசிக்கின்றனர்.

**மொழி:** பத்து வட்டார மொழி வழக்குகளைக் கொண்ட சங் மொழி, மத்திய திபெத்திய மொழியின் ஒரு வகையாகும். இம்மொழியை மத்திய திபெத்திய மொழி மற்றும் ஙாரி மொழி பேசுபவர்கள் புரிந்து கொண்டாலும், தொடர்புகொள்ளும்போது, உச்சரிப்பு மற்றும் மொழியில் அடைந்துள்ள அனுபவம் இவற்றின் காரணமாக சில கடினங்கள் ஏற்படுவதுண்டு. மொழிகளில் வித்தியாசங்கள் இருப்பினும் எல்லாத் திபெத்தியர்களும் சமஸ்கிருதத்தை அடிப்படையாகக்கொண்ட ஒரே எழுத்தைப் பயன்படுத்துகின்றார்கள். ஏழாம் நூற்றாண்டில் ராஜா சொங்ஸ்சென் கம்பொ (Songsten Gampo) தன்னுடைய மந்திரி தொன்மி சம்போதாவை (Thonmi Sambhota) இந்தியாவிற்கு அனுப்பினார்; அவர் அங்கே திபெத்திய எழுத்தை உருவாக்கினர்.

**வரலாறு:** கி.பி. 1618 முதல் 1642 வரை திபெத்தின் தலைநகரமாயிருந்த ஷிகாசே, தலாய் லாமாவிற்குப் பிறகு திபெத்தின் இரண்டாவது முக்கிய ஆட்சியாளரான பன்சென் லாமாவின் (Panchen Lama) இருப்பிடமாகும். கி.பி. 1954 ல் ஏற்பட்ட வெள்ளத்தில் இந்த நகரம் ஏறக்குறைய முழுவதும் அழிக்கப்பட்டது. சீன அரசாங்கம் கி.பி.1959 ல் சீனாவிற்கு விரோதமாக ஏற்பட்ட கிளர்ச்சியை ஒடுக்கி, தஷி லுன்போ புத்தமடத்தின் 400 புத்தத்துறவிகளைச் சிறையிலடைத்தது.

**பழக்கவழக்கங்கள்:** ஷிகாசே புதுவருடப் பிறப்பு, திங்கள் ஆண்டின் 12 வது மாதம் கொண்டாடப்படுகிறது. கி.பி. 1408 முதற்கொண்டே ஒவ்வொரு வருடமும் ஆயிரக்கணக்கானோர் கியன்செவில் நடக்கும் குதிரைப் பந்தயம் மற்றும் வில் அம்பு போட்டியைக் காணக் கூடுவதுண்டு. கி.பி. 1900 களில் கியன்செவில் தங்கியிருந்த இங்கிலாந்தின் வியாபார பிரதிநிதி கேப்டன் ஓ. கொன்நேர் (O'Conner) கியன்செ திபெத்தியர்களை இவ்வாறு விவரித்தார் 'உலகம் கண்டிராத இயல்மீறிய துறவிக் கொள்கை மற்றும் பூசாரி ஆட்சியின் வளர்ச்சியால் ஒடுக்கப்பட்டு, நிச்சயமாகவே மூடநம்பிக்கையின் உச்சத்தில் உள்ளனர்; ஆனால் வேரூன்றிய மதம் சார்ந்த இருதய ஆய்வோ அல்லது குற்றப்படுத்தும் மனசாட்சியோ இல்லாத நிலையில் வாழ்கின்றனர்.'

**மதம்:** நிங்பா (Nyingmapa) (பழமையானது) , காக்யுபா (Kagyupa) (வாய்மூலம் பரப்புதல்) மற்றும் சக்யா (Sakya) (சாம்பல் நிற பூமி) பள்ளிகள் போன்ற அநேக புத்தமதப் பிரிவுகளுக்கு கியன்செ இருப்பிடமாக உள்ளது. கி.பி.1989 ல் பன்சென் லாமாவின் மரணத்திற்குப்பிறகு சீன அரசாங்கம் அவருடைய இடத்தைத் தன் விருப்பத்தின்படி நிரப்பினது. கி.பி.1995 ல் நாட்டைவிட்டு வெளியேறிய தலாய் லாமா ஒரு புதிய பன்சென் லாமாவை அறிவித்தார்; இதை உடனே சீன அரசாங்கம் நிராகரித்துவிட்டது. தஷி லுன்போ புத்த மடத்தின் துறவிகள் மற்றும் சாதாரண மக்கள் போராட்டம் செய்தனர். எண்பது துறவிகள் காவல்துறையால் விசாரணைக்குக் கொண்டுசெல்லப்பட்டனர் மற்றும் ஷிகாசே நகரம் அநேக நாட்களுக்கு மூடப்பட்டது.

**கிறிஸ்துவம்:** ஜேஸூஎட் (Jesuit) மிஷனெரி அன்டொனியொ டி அன்ட்ராடி (Antonio de Andrade) இந்து சாதுவைப்போல் வேடந்தரித்து கி.பி.1624 ல் திபெத்திற்குள் நுழைந்தார். அன்டொனியொ தந்திரமாகக் கொடூரமான உள்ளூர் அதிகாரிகளைக் கடந்து வடக்கே இமயமலையை நோக்கி பயணம் செய்தார். அதிக உயரத்தினால் உண்டாகும் நோய்களோடும் பனியினால் உண்டாகும் குருட்டுத் தன்மையோடும் போராடி, 17,900 அடி உயரப் பாதையைக் கடந்து, திபெத்திற்குள் நுழைந்து, சபரங்கைச்(Tsaparang) சென்றடைந்தார். தன்னுடைய பக்தியால் ராஜா மற்றும் ராணியை வியக்கவைத்தார். அவர்கள் அவருக்கு மறுபடியும் வரவும், ஒரு பணித் தளத்தை நிறுவவும் மற்றும் சுவிசேஷத்தை அறிவிக்கவும் அனுமதி அளித்தனர்.' கி.பி.1635 ல் ஏற்பட்ட ஒரு புரட்சி ஜேஸூஎட் பணியை முடிவுக்குக் கொண்டுவந்தது. இந்நாட்களில் சில சங் கிறிஸ்தவர்கள் மட்டுமே உண்டு.




**Population:**
661,200 (2000)
814,900 (2010)
1,004,400 (2020)

**Countries:** China, Nepal, India

**Buddhism:** Tibetan

**Christians:** 50

## மேலோட்டம்:

**மற்ற பெயர்கள்:** Xigatse Tibetans, Xigatze Tibetans, Xigatze, Gyantse, Sagya, Tsang, Xigaze Tibetans

**மக்கள்தொகை:** 457,700 in China (1987, Language Atlas of China); 50,000 in Nepal (1987, D Bradley), also in India

**மொழிப்பிரிவு:** சீன-திபெத்திய, திபெத்திய-பர்மிய,ஹிமாலய, திபெத்திய-கனௌரி, திபெத்திய, மத்திய திபெத்திய மொழி

**மொழி வழக்குகள்:** 10 (Reng, Pungmo, Kag, Lo, Gyasumdo, Kyidgrong, Dingri, Zhiskartse, Gyalrtse, Nadkarrtse)

**திபெத்திய புத்தமதம்:** 99%

**கிறிஸ்துவம்:** 0.1%

**வேதாகமம்:**சில பகுதிகள் கி.பி.1862,புதியஏற்பாடு கி.பி. 1885, திபெத்திய பைபிள் கி.பி. 1948

**இயேசுதிரைப்படம்:**இல்லை

**சு. ஒலிப்பதிவுகள்:** இல்லை

**கி. அலைபரப்புகள்:**இல்லை

ROPAL **குறியீடு :** TIC01

**கிறிஸ்துவத்தின் நிலை**

